மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., B.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.
2021ம் வருடம் டிசம்பர் மாதம் 20 ம் நாள்
ஸ்ரீபிலவ ஆண்டு மார்கழி மாதம் 05ம் நாள் திங்கட்கிழமை

**CNR No. TNMD190000322020**

**I.A . No. 827/2021**
**in**
**IA No. 137/2020**
**in**
**O.S. No. 06/2020**

1) மலைச்சாமி
2) ராக்கு
3) ராமு
4) முத்துலெட்சுமி
5) சுந்தர்
6) மீனா
7) வினோத்
8) ஆர்த்தி

.....
மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

//எதிர்//

போஸ் தலைமை நிர்வாகி
(ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் )

.... எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி

இம்மனு 02.09.2021ம்தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M. வெங்கடேசன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் திரு.K. ராமனாதன் அவர்கள் ஆஜராகியும், கடந்த 13.12.2021ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

**உத்தரவு**

இந்த நிர் மனுவும் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மனுவுடன்

தாக்கல் செய்யப்பட்டுள்ள இடைக்கால மனு எண். IA.No. 137/2020 மனுவில் தாக்கல் செய்யப்படவேண்டிய கூடுதல் எதிர் உரையினை காலதாமதமாக தாக்கல் செய்வதை மன்னித்து ஏற்றுக்கொள்ளக்கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 8 விதி 9 மற்றும் சட்டப்பிரிவு 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) மனுவின் சுருக்கம்:**

மனுதாரர்கள் இடைநிலை மனு எண். IA No. 137/2020 மனுவில் எதிர்மனுதாரர்கள் என்றும், அசல் வழக்கில் பிரதிவாதிகள் என்றும், அசல் வழக்கானது பிரதிவாதிகளைக் கட்டுப்படுத்தி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், அசல் வழக்கில் இந்த நிர் எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியானவர் தாவா சொத்தான கோவிலின் தலைமை நிர்வாகி என்ற அடிப்படையில் கச்சைகட்டி கிராம புதிய சர்வே எண். 1754/4 விஸ்தீரணம் 710 சதுரடி விஸ்தீரணமுள்ள இடமானது எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதியின் அனுபவத்தில் இருப்பதாகவும், அதில் பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி பிரதிவாதிகளைக்கட்டுப்படுத்தி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், இந்நிலையில், மேற்படி அசல் வழக்கு பிராதுடன் சேர்த்து இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மனு தாக்கல் செய்து அதுவும் இடைக்கால மனு எண். IA. No. 137/2020 ன்படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மனுதாரர் தரப்பு விசாரணை முடிக்கப்பட்டு, எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரின் வழக்கறிஞர் அரசு வேலை கிடைத்து சென்று விட்டதால், தற்சமயம் புதிய வழக்கறிஞரை நியமனம் செய்து எதிர்வாதத்திற்கான ஏற்பாடு செய்து வருகின்ற நிலையில், மேற்படி முந்தைய வழக்கறிஞர் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் தரப்பு எதிர்வாதத்தினை மேற்படி இடைக்கால மனு எண். IA. No. 137/2020 மனுவிற்கான எதிர்உரையிலோ அல்லது அசல் வழக்கு பிராதிற்கான எதிர்வழக்குரையிலோ முறையாகவும், சரியாகவும் தெரியப்படுத்தாமல் விடுபட்டு உள்ளது என்றும், எனவே மேற்படி பொருண்மைகளை தெரிவிக்கும் பொருட்டு மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்உரையினை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானதாகவும், நியாயமானதாகவும் உள்ளது என்றும், அவ்வாறு இல்லாவிடில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாங்க இயலாத கஷ்ட நஷ்டம் ஏற்பட்டு விடும் என்றும், எனவே மனு அனுமதிக்கப்படவேண்டுமெனவும் வாதுரைக்கப்பட்டது.

**2) எதிர்மனுதாரர் தரப்பு எதிர்உரையின் சுருக்கம்**

மனுவில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தும் தவறானதாகும். அசல் வழக்கு மற்றும் இடைக்கால மனு எண். IA. No. 137/2020 மனுவிற்கு எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர் உரை தாக்கல் செய்யப்பட்டு, இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டு, உத்தரவிற்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், உண்மையில், ஏற்கனவே இம்மனுவும் 29.04.2021ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டது திருப்பப்பட்டுள்ள நிலையில், அதனை பெற்றுக்கொண்ட எதிர்மனுதாரர்கள், அதனை மீண்டும் 12.08.2021ம் தேதி வரை பல்வேறு தேதிகளில் வழக்கு நடவடிக்கைகளில் ஈடுபட்டும் திரும்ப தாக்கல் செய்யாமல் இருந்து விட்டு, தற்சமயம் கூடுதல் பதில்உரை தாக்கல் செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்யப்பட்டதாக குறிப்பிட்டு தாக்கல் செய்துள்ளது சட்டப்படியும், பொருண்மைபடியும் ஏற்கத்தக்கதல்ல எனவும் எனவே மனு தள்ளுபடி செய்யப்படவேண்டுமெனவும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

3) மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதை தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

**<u>தீர்வு:-</u>**

4) இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்யும்பொழுது, அசல் வழக்கில் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையிலும், இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்யப்பட்ட இடைநிலை மனு எண் IA.No.137/2020 மனுவில் இந்த நிர் மனுதாரர்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில் இம்மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. அசல் வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்உரையானது அவர்களது முந்தைய வழக்கறிஞரால் கடந்த 03.09.2020ம் தேதியில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இடைக்கால உறுத்துக்கட்டளை கோரி தாக்கல் செய்துள்ள இடைநிலை மனு எண். IA.No. 137/2020 மனுவில் எதிர் உரையாக பாவித்துக்கொள்ள இந்த நிர் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு, அதன் பேரில் விசாரணைக்காக ஒத்தி வைக்கப்பட்டு, கடந்த 19.11.2020ம் தேதியில் மனுதாரர் தரப்பு விசாரணை கேட்கப்பட்டு, மனுதாரர் தரப்பில் ம.சா.ஆ1 முதல் 7 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பின்னீடு இந்த நிர் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு வாதுரைக்காக ஒத்தி வைக்கப்பட்டுள்ள நிலையில், இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவில்

மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் முக்கிய பொருண்மையாக அவர்களது முந்தைய வழக்கறிஞரால் தாவா சொத்து தொடர்பான முக்கியமான பொருண்மைகள் எதிர்வழக்குரையில் குறிப்பிடப்படாமல் விடுப்பட்டு விட்டது என்றும், அதனை தற்சமயம் புதிய வழக்கறிஞர் நியமனம் செய்து கலந்தாலோசித்த பின்னீடு தெரியவந்துள்ளதால், மேற்படி பொருண்மையினை நீதிமன்றத்திற்கு தெரியப்படுத்தும் பொருட்டு கூடுதல் எதிர்உரையினை ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியமானது என வாதுரைக்கப்பட்டது.

5) இது தொடர்பாக பரிசீலனை செய்யம்பொழுது, அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர் வழக்குரையில், மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில், பிராதில் குறிப்பிட்டுள்ள விபரங்கள் அனைத்தையும் மறுத்ததோடு, வாதிக்கு கிரையம் கொடுத்த A.V.கருப்புசேர்வை என்பவருக்கு தாவா சொத்து உரிமைப் பாத்தியமானதாகவோ அனுபவபாத்தியமானதாகவோ இருந்து வரவில்லை என்றும், அதுவும் நத்தம் கிராம புறம்போக்கில் கட்டுப்பட்டது என்றும், அதனை மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தொடர்ந்து அனுபவம் செய்து வருவதாகவும் குறிப்பிட்டு எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது தெரியவருகிறது. தற்சமயம் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்உரையினை பரிசீலனை செய்யும்பொழுது, அதில் மேற்படி தாவா சொத்தான சர்வே எண். 1754/4ல் தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலான ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் பீடத்திலிருந்து 11 அடி தூரத்திலிருந்து வடமேற்கு மற்றும் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பக்கங்களில் சேர்த்து 3450 சதுரடி நிலத்தினை கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் அனுபவம் செய்து வந்து, அதனடிப்படையில், கச்சைக்கட்டி ஊராட்சிமன்ற வீட்டு வரி விதிப்பு எண் 340ன்படி கதவு எண். 2/91க்கு வீட்டு வரி செலுத்தப்பட்டும், குடிதண்ணீர் குழாய் இணைப்பு பெற்றும் பயன்படுத்தி வருவதாகவும், இரண்டு மின் இணைப்புகள் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

6) இது தொடர்பாக பிராது சொத்து விபரத்தில் பரிசீலனை செய்யும்பொழுது, பிராது சொத்து விபரத்தில், சர்வேஎண். 1754/4ல் கட்டுப்பட்ட 710 சதுரடி எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு உரிமை மற்றும் அனுபவ பாத்தியமானதாக வாதுரைத்து அதனடிப்படையில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியுள்ளது தெரியவருகிறது. எனவே தாவா சொத்தானது, சர்வே எண்.1754/4ல் கட்டுப்பட்டுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. ஆனால் மேற்படி சர்வே எண்ணில் கட்டுப்பட்ட சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பதற்கு ஆதரவாக இருதரப்பிலும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வழக்கு பரிகாரம் தொடர்பாக தீர்வு காண்பதற்கும் வழக்கு தரப்பினர்களுக்கிடையேயான பிரச்சனையை முழுமையாகவும், அறுதியாகவும் தீர்வு காண்பதற்கு வழக்கு சொத்து பற்றிய விபரங்கள் தெளிவாகவும்

குறிப்பாகவும் வாதுரைக்கப்படவேண்டும் என்பதும் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டப்பிரிவு கட்டளை 7 விதி 3ன்படி சொத்து விபரம் தெளிவாக குறிப்பிடாத பட்சத்தில் வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதில்லை என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடு ஆகும். உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 7 விதி 3ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**Order VII Rule 3**

**3. Where the subject-matter of the suit is immovable property. -** Where the subject-matter of the suit is immovable property, the plaint shall contain a description of the property sufficient to identity it, and, in case such property can be identified by boundaries or numbers in a record of settlement or survey, the plaint shall specify such boundaries or numbers.

மேற்படி பொருண்மை தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு, **2012 (1) TNCJ 649 (Mad) (MB)** என்ற சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

**AM. Kothandaramasamy Koil Thirupuvanam (vs) Vairam and others, "Order 7 Rule 3 " Specific Relief Act 1963 – Section 39 Mandatory Injunction:** plaint completely lacking proper description of suit property so as to identify same – Hence injunction cannot be granted. எனக்குறிப்பிடப்பட்டுள்ளது.

7) ஆனால் இந்த நிர் வழக்கு நடவடிக்கையில் வழக்கின் இருதரப்பினர்களாலும் தாவா சொத்தான பழைய சர்வே எண்.1077/2part நம்பருக்கு புதிய சர்வே எண். 1754/4ல் கட்டுப்பட்டுள்ள சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்பது தொடர்பான விபரங்களை வாதுரைக்கவில்லை என்பதோடு, அது தொடர்பான சான்றாவணங்களையும் முன்னிலைப் படுத்தவில்லை என்பது தெரியவருகிறது. எனவே மேற்படி பொருண்மை குறித்த விபரத்தினை இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் வழக்கின் விசாரணையின் இறுதியிலே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. மேலும் கூடுதல் எதிர்உரையில் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் ஸ்ரீவெண்ணிமுத்து அய்யனார் கோவில் அமைந்துள்ளதை மறுக்கவில்லை. மாறாக மேற்படி கோவில் பீடத்திலிருந்து 11 அடி தூரத்திலிருந்து வடமேற்கு மற்றும் வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பகுதிகளில் 3450 சதுரடி நிலம் உள்ள இடமானது மேற்படியார்களுக்கு உரிமை மற்றும் அனுபவப்பாத்தியமானதாக இருந்து வருவதாக மட்டுமே எதிர்வாதம் செய்யப்பட்டுள்ளது

தெரியவருகிறது. எனவே தாவா சொத்தான சர்வே எண். 1754/4ல் வழக்கு தரப்பினர்களுக்கு எவ்வளவு விஸ்தீரணம் உள்ள சொத்தானது உரிமை மற்றும் அனுபவ பாத்தியமானதாக இருந்து வருகிறது என்பதனை தீர்வு காண்பதற்கு அது தொடர்பான பொருண்மைகளை வாதுரைக்க வேண்டியது அவசியமானதாகவே இந்நீதிமன்றம் கருதுகிறது.

8) ஏனெனில் வாதுரைக்கப்படாத பொருண்மைகள் குறித்து சாட்சியமளிக்க இயலாது என்பதும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும்.இந்த பொருண்மை தொடர்பான விவரங்கள் குறித்து மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் Kanchana John Basco (vs) A. Gandhi என்ற வழக்கில்

**<u>Evidence eschewed</u>:** It has been held that it is a common or golden principle governing the law of pleadings that any amount of evidence without backing of pleadings should be eschewed என உத்திரவிடப்பட்டு அதுவும் 2011(1) LW 918 (Mad) என சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

9) மேலும் இந்த நிர் அசல் வழக்கும் விசாரணை தொடங்கப்படாத ஆரம்ப நிலையிலே இருந்து வருவது தெரியவருகின்றது. எனவே இருதரப்பு வாதுரை மற்றும் வழக்கு பொருண்மைகள் மற்றும் நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாட்டின்படி வழக்கு தரப்பினர்களுக்கிடையே பிரச்சனையை முழுமையாகவும் அறுதியாகவும் தீர்வு காண்பதற்கு மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் எதிர்உரையினை ஏற்றுக்கொள்வது அவசியமானதாகவும், நியாயமானதாகவும் இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது. இருந்த போதிலும், இம்மனு நடவடிக்கையினால், எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு ஏற்பட்டுள்ள காலவிரையம் மற்றும் பொருளாதார விரையத்தினை ஈடு செய்யும் பொருட்டு செலவுதொகையாக ரூ.500/- ஐ 23.12.2021ம் தேதிக்குள் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் செலுத்தும்பட்சத்தில் அனுமதிக்கக்கூடியது என தீர்வு காண்கிறது.

இறுதியாக இம்மனு அனுமதிக்கப்படுகின்றது. இருப்பினும் இம்மனு நடவடிக்கையினால், எதிர்தரப்பினருக்கு ஏற்பட்ட காலம் மற்றும் பொருளாதார இழப்பை நிவர்த்தி செய்யும் பொருட்டு எதிர்மனுதாரர்/மனுதாரர்/வாதிக்கு செலவுதொகையாக ரூ.500/- 23.12.2021ம் தேதிக்குள் மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள் செலுத்தும்பட்சத்தில் அனுமதிக்கக்கூடியது என உத்தரவிடப்படுகின்றது.

பணம் செலுத்தப்பட்டதை நீதிமன்றத்தில் பதிவு செய்வதற்கான கேட்பு நாள் : 23.12.2021

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2021ம் ஆண்டு டிசம்பர் மாதம் 20ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

(ஓம். D. ராம்கணேஷ்)
**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**வாடிப்பட்டி.**

**//உண்மை நகல்//**